# இயேசுவை தினம் பார்க்கிறேன்

VOL 22 ISSUE 07 JULY-2022 ஆண்டு சந்தா 100/- தனிப்பிரிதி 10/-



# விருந்தை ஆயத்தப்படுத்துவார்

WWW.JESUSLIVES.IN

# ஆசிரியர் உரை

ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவின் இனிய நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள். தேவனுடைய பெரிதான கிருபையினால் இந்த மாதஇதழ் மூலமாக உங்களைச் சந்திப்பதில் மிகுந்த மகிழ்ச்சியடைகிறேன். சங்கீதம் 86:5-ல் ஆண்டவரே, நீர், நல்லவரும், மன்னிக்கிறவரும், உம்மை நோக்கிக் கூப்பிடுகிற யாவர்மேலும் கிருபை மிகுந்தவருமாயிருக்கிறீர் என்ற வார்த்தையின்படி மிகுந்த கிருபையுள்ளவருமாயிருக்கிறீர். தேவனுடைய பெரிதான கிருபையினால் பாவூர்சத்திரத்தில் நடைபெற்ற எல்லா கூட்டங்களையும் தேவன் அளவில்லாமல் ஆசீர்வதித்தார் கர்த்தருடைய நாமம் மகிமைப்பட்டது. தொடர்ந்து **ஜீன் 30 - ஜீலை 3 வரை தேதிகளில் திருச்சி புத்தூரில் உள்ள YMCA** மைதானத்தில் வைத்துப் பேரின்ப பெருவிழா நடைபெறுகிறது. அதற்காக ஜெபித்துக் கொள்ளுங்கள். தேவனுடைய கிருபையினால் மதுரை மாவட்டத்தின் எழுப்புதலுக்காகவும், குடும்பங்களின் ஆசீர்வாதத்திற்காகவும் ஒவ்வொரு மாதமும் மூன்றாவது சனிக்கிழமை தோறும் ஆசீர்வாத உபவாச ஜெபம் நடைபெறுகிறது. இந்த கூட்டத்தில் ஒவ்வொரு மாதமும் பல தேவ ஊழியர்கள் கலந்து கொண்டு தேவ செய்தியை கொடுக்க இருக்கிறார்கள். பாரமுள்ள யாவரும், மதுரை மாவட்டத்தைச் சார்ந்த யாவரும் இதிலே கட்டாயம் கலந்து கொள்ள வேண்டும் என்று அன்புடன் கேட்டுக் கொள்கிறோம். அதைத் தொடர்ந்து சுவிசேஷகர்கள் பயிற்சி முகாம் ஜீலை மாதம் நடைபெற இருக்கிறது. ஆறு நாட்கள் மங்கிப்போன சுவிசேஷத்தை எப்படி அறிவிப்பது என்று பயிற்சி கொடுக்க இருக்கிறோம். இவைகள் யாவற்றிற்காகவும் நீங்கள் பாரத்தோடு ஜெபிக்கும்படி கேட்டுக் கொள்கிறேன். நம்முடைய **You Tube** சேனலில் ஒளிபரப்பாகும் கர்த்தாவே என்னை கைதூக்கிவிடும், இயேசுவை தினம் பார்ப்போம், சுவிசேஷ ஒளி நிகழ்ச்சி எல்லாம் ஆசீர்வாதமாக நடைபெறுகிறது. தொடர்ந்து எல்லா ஊழியங்களுக்காகவும் ஜெபித்துக் கொள்ளுங்கள். உங்கள் தாராளமான காணிக்கைகளை அனுப்பி இந்த ஊழியத்தைத் தாங்கும்படி கேட்டுக் கொள்கிறேன். இயேசுகிறிஸ்துவின் மாறாத கிருபை நம் அனைவரோடும் இருப்பதாக.



அன்புடன் உங்கள் சகோதரர்

L. Vincentraj

(சகோ. L.வின்சென்ட்ராஜ்)

# விருந்தை ஆயத்தப்படுத்துவார்



சகோ. L. வின்சென்ட்ராஜ்

ஆண்டவரும் உலக இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள். தேவனுடைய பெரிதான கிருபையினால் இந்த செய்தியின் வாயிலாக உங்களைச் சந்திப்பதில் மிகுந்த மகிழ்ச்சியடைகிறேன். இன்றைக்கு மனிதர்கள் ஒருவரை ஒருவர் நேசிக்கும் போது அல்லது அன்பு கூறும்போது அவர்களை வீட்டிற்கு அழைக்கிறோம், சாப்பாடு கொடுக்கிறோம். நமக்கு இன்னும் அதிக நெருக்கமானவர்கள் என்றால் அவர்களுக்கு விருந்து வைக்கின்றோம். நாம் அவர்கள் மேல் கொண்டி ருக்கும் அன்பை வெளிப்படுத்துகின்றோம். மனிதர்கள் மற்றவர்கள் மேல் வைக்கின்ற அன்பை வெளிப்படுத்துவதற்கு நாம் இப்படிப்பட்ட காரியங்களைச் செய்கின்றோம். நமக்கு அன்பானவர்களுக்கு உணவோடு வெகுமதிகளையும், அன்பளிப்புகளையும் வாங்கிக் கொடுக்கின்றோம். நாம் சந்தோஷமாக இருக்கின்றோம், மற்றவர்களையும் சந்தோஷப்படுத்துகின்றோம் என்பதின் அடையாளமாக இவைகளைச் செய்கிறோம். வேதத்தை வாசித்துப் பார்க்கும்போது ஆபிரகாம் தன் மகனாகிய ஈசாக்கு பால்மறந்த நாளிலே பெரிய விருந்து வைத்து கர்த்தரை மகிமைப்படுத்தினார். ஆதி 21:8 அப்படிச் சொல்லுகிறது. ஈசாக்கின் வாழ்க்கையைப் பாருங்கள் அவன் விருத்தியடைகின்றதைக் கண்டு, அவன்மேல் பொறாமை கொண்டவர்கள் அவனுக்கு விரோதமாக ஈசாக்கு வெட்டின துரவுகளை எல்லாம் தூர்த்துப்போட்டு இடையூறு பண்ணினார்கள். ஆனால் தேவன் ஈசாக்கை கைவிடவில்லை. அவர் தீமையை நன்மையாக மாற்றுகிறவர், விரோதமாக இருப்பவர்களை பட்சமாக கொண்டு வருகிறவர், ஈசாக்குக்காக அபிமேலெக்கு என்ற ராஜாவை சந்தித்து, எச்சரித்து இருவரும் சமாதானமாக கர்த்தர் கிருபை செய்தார். அப்பொழுது ஈசாக்கு அவர்களுக்கு விருந்து வைத்து சமாதான உடன்படிக்கை செய்து கொண்டார்கள். இன்றைக்கு ஒரு தேசத்தின் தலைவர் பிரதம மந்திரி அல்லது ஜனாதிபதி மற்றொரு தேசத்திற்கு செல்லும்போது, இன்றைய காலத்தில் அவர்களை வரவேற்க சிவப்பு கம்பளம் விரித்து, அவர்கள் விரும்புகிற உணவை பறிமாறி தங்கள் அன்பை வெளிப்படுத்துகிறார்கள். இப்படி உலகத்தில் வாழும் நாம் மற்றவர்கள் மேல் உள்ள மதிப்பு, மரியாதையால் விருந்து கொடுப்பது உண்மை என்றால் பரலோகம் கொடுக்கும் விருந்து எவ்வளவு மேலானது. இன்னும் நாம் வேதத்தில் பார்க்கும் போது தேவமனிதர்கள் தேவதூதரையும் உபசரித்து விருந்து வைத்தார்கள். எபிரேயர் 13:2-ல் அந்நியரை உபசரிக்க மறவாதிருங்கள். அதினாலே சிலர் அறியாமல் தேவதூதரையும் உபசரித்ததுண்டு என்று சொல்லப்பட்டுள்ளது. அப்படியாகத்தான் லோத்து தேவதூதருக்கு விருந்து வைத்தான். ஆபிரகாம் வாழ்க்கையைப் பாருங்கள். அவரும் தேவதூதருக்கு விருந்து வைத்து அவர்களை உபசரித்தார். ஆதி 18:1-8 வரையுள்ள வசனம் அப்படிச் சொல்லுகிறது. அப்படி விருந்து வைக்கும்போது தேவதூதர்களால் தேவனுடைய திட்டம் ஆபிரகாமுக்கு வெளிப்படுத்தப்பட்டது. நியாய 13:15,16-லும் மனோவா அப்படிச் செய்வதை பார்க்கிறோம். இந்த பூமியிலே இப்படி உபசரிப்பும், விருந்தும் நடப்பது உண்மை என்றால் பரலோகத்தில் நடக்கும் விருந்து எவ்வளவு மேலானதாய் இருக்கும். வெளி 19:7-ல் நாம் சந்தோஷப்பட்டு களிகூர்ந்து அவருக்கு துதி செலுத்தக்கடவோம். ஆட்டுக்குட்டியானவருடைய கலியாணம் வந்தது. 9-ஆம் வசனத்தில் ஆட்டுக்குட்டியானவருடைய கலியாண விருந்துக்கு அழைக்கப்பட்டவர்கள் பாக்கியவான்கள் என்று எழுது என்றார். பரலோகத்தில் நடக்கும் விருந்து உணவும், உடையும் அல்ல. காரணம் மாம்சமும் இரத்தமும் பரலோக ராஜ்யத்தை சுதந்தரிப்பதில்லை. அங்கு நம்முடைய ஆத்துமா தான் தேவனோடு உலாவும். ஆகவேதான் அப்போஸ்தலனாகிய பவுல் ரோமர் 14:17-ல் தேவனுடைய ராஜ்யம் புசிப்பும், குடிப்புமல்ல, அது நீதியும் சமாதானமும் பரிசுத்த ஆவியினாலுண்டாகும் சந்தோஷமுமாயிருக்கிறது என்றார். பரலோகத்தில் தேவன் நமக்கு வைத்திருக்கும் விருந்து நம்முடைய அறிவுக்கும், புத்திக்கும் எட்டாதது. அதை நம்மால் விளங்கிக்

கொள்ளவும், விவரிக்கவும் முடியாதது. பூமியில் மனிதர்கள் இயேசுவை ஏற்றுக்கொண்டு, உலகத்தை வெறுத்து, இச்சைகளை வெறுத்து, பரிசுத்தத்தோடும், நீதியோடும் வாழ்ந்தவர்கள் அந்த விருந்திலே கலந்து கொள்வார்கள். மட்டுமல்ல பூமியிலே பட்டபாடுகள், நிந்தைகள், அவமானங்கள், கர்த்தருக்காக அவர்கள் எடுத்துக்கொண்ட பிரயாசங்கள் எல்லாவற்றிற்கும் அங்கு ஆறுதலும், தேறுதலும் அடைவார்கள்.
இதைத்தான் லூக்கா 16-ம் அதிகாரத்தில் பார்க்கிறோம். 25-ஆம் வசனத்தில் நீ பூமியில் உயிரோடிருக்கும் காலத்தில் நன்மைகளை அனுபவித்தாய் லாசருவும் அப்படியே தீமைகளை, வேதனைகளை, பாடுகளை அனுபவித்தான். அதை நினைத்துக்கொள், இப்பொழுது அவன் தேற்றப்படுகிறான், ஆறுதல் அடைகிறான், நீயோ வேதனைப்படுகிறாய் என்றார். இந்த பூமியிலே கர்த்தருக்காக வாழ்ந்து, பாடுபட்டு எல்லா உலக மேன்மைகளையும் இழந்தவர்கள் அங்கு தேவனால் தேற்றப்படுவார்கள். இதைத்தான் ஏசாயா 25:6-8 வரையுள்ள வசனம் சொல்லுகிறது. அவர் சகல ஜனங்கள் மேலுள்ள முக்காட்டையும், சகல ஜாதிகளையும் மூடியிருக்கிற மூடலையும் இந்த மலையிலே அகற்றிப்போடுவார், அவர் மரணத்தை ஜெயமாக விழுங்குவார். கர்த்தராகிய தேவன் எல்லா முகங்களிலிருந்து கண்ணீரைத் துடைத்து தமது ஜனத்தின் நிந்தையை பூமியிலிராதபடிக்கு முற்றிலும் நீக்கிவிடுவார். கர்த்தரே இதைச் சொன்னார் அவ்வளவு மகிமையும் பிரகாசமும் நிறைந்த விருந்து அது. இந்த விருந்துக்கு அழைக்கப்பட்டவன், பங்கு பெறுகிறவன் பாக்கியவான். ஏசாயா 55:1-ல் ஓ!
தாகமாயிருக்கிறவர்களே, நீங்கள் எல்லாரும் தண்ணீர்களண்டைக்கு வாருங்கள், பணமில்லாதவர்களே, நீங்கள் வந்து வாங்கிச் சாப்பிடுங்கள். நீங்கள் வந்து பணமுமின்றி, விலையுமின்றி திராட்சரசமும் பாலும் கொள்ளுங்கள். நீங்கள் அப்பமல்லாததற்காகப் பணத்தையும், திருப்தி செய்யாத பொருளுக்காக உங்கள் பிரயாசத்தையும் செலவழிப்பானேன். நீங்கள் கவனமாய் எனக்கு செவி கொடுத்து நலமானதை சாப்பிடுங்கள். அப்பொழுது உங்கள் ஆத்துமா கொழுப்பான பதார்த்தத்தினால் மகிழ்ச்சியாகும் என்றார். இந்த செய்தியை வாசித்துக் கொண்டிருக்கும் என் அன்பு சகோதர, சகோதரிகளே, லூக்கா 14:15-ல் தேவனுடைய ராஜ்யத்திலே போஜனம் பண்ணுகிறவன் பாக்கியவான் என்றார். இன்றைக்கு இப்படிப்பட்ட ஒரு மேன்மையான, உன்னதமான வாழ்க்கைக்கு தான் கர்த்தர் நம்மை அழைத்திருக்கிறார். அந்த விருந்திற்குப் போவதற்குத்தான் நாம் இந்த பூமியிலே இயேசுவை சொந்தரட்சகராக ஏற்றுக் கொண்டிருக்கிறோம், அவரை பின்பற்றுகிறோம், பரிசுத்த ஆவியின் அபிஷேகம் பெற்றிருக்கிறோம். அவருக்கு மகிமையாக வாழ ஊழியம் செய்கிறோம். ஆண்டவரே, இயேசுவே, இந்த பாக்கியத்தை எனக்குத் தாரும் என்று கேளுங்கள். அப்பொழுது தேவன் இந்த பூமியிலே நம்மைத் தகுதிப்படுத்தி, பரிசுத்தவான்கள் பந்தியிலே போஜனம் பண்ண உதவி செய்வார். அதற்கு நிழலாட்டமாகத்தான் இந்த பூமியிலே மனிதர்களுடைய விருந்து அமைந்திருக்கிறது. என் ஆண்டவராகிய தேவன் தாமே உங்களுக்கு அப்படிப்பட்ட பாக்கியத்தைத் தருவாராக, தேற்றுவாராக, ஆறுதல்படுத்துவாராக!. போகட்டும், யாருக்கெல்லாம் விருந்து, எப்படிப்பட்டவர்களுக்கு விருந்து வைத்தி ருக்கிறார் என்பதைப் பார்ப்போம்.

## மனம் திரும்பிய மகனுக்கு விருந்து

அப்பொழுது தகப்பன் தன் ஊழியக்காரரை நோக்கி நீங்கள் உயர்ந்த வஸ்திரத்தை கொண்டு வந்து இவனுக்கு உடுத்தி இவன் கைக்கு மோதிரத்தையும், பாதரட்சைகளையும் போடுங்கள், கொழுத்த கன்றைக் கொண்டுவந்து அடியுங்கள் நாம் புசித்து சந்தோஷமாயிருப்போம். லூக்கா 15:22,23. பரலோக நிழலாட்டமாய் யாருக்கு பூமியிலே தேவன் விருந்து வைக்கிறார்? மனம்திரும்பி அவருக்கு செவி கொடுப்பவர்களுக்குத்தான். மனம் திரும்பாமல், நம்முடைய துர்க்குணத்தை விடாமல், நம்முடைய பாவம் நமக்கு மன்னிக்கப்படாது. இன்றைக்கே நாம் மனம்திரும்பி அவருடைய சாயலுக்கு ஒப்பாக மாற வேண்டும். பழையவைகள் ஒழிய வேண்டும். புதியவைகள் உண்டாக வேண்டும். இன்றைக்கு இருக்கின்ற இந்த வெளிப்படையான வாழ்வை வைத்துக் கொண்டு, பூரணமடையாத இந்த வாழ்வை வைத்துக்கொண்டு தேவனுக்காக நாம் எதையும் செய்ய முடியாது. நாம் மனம் உவந்து செவி கொடுக்க வேண்டும். ஏசாயா 1:15-20-ல் நீங்கள் உங்கள் கைகளை விரித்தாலும் என் கண்களை உங்களை விட்டு மறைக்கிறேன். நீங்கள் மிகுதியாய் ஜெபம் பண்ணினாலும் கேளேன், உங்கள் கைகள் இரத்தத்தினால் நிறைந்திருக்கிறது. உங்களைக் கழுவி சுத்திகரியுங்கள். உங்கள் கிரியைகளின் பொல்லாப்பை என் கண்களுக்கு மறைவாக அகற்றி, தீமை செய்வதை விட்டு ஓயுங்கள், நன்மை செய்யப் படியுங்கள். நியாயத்தை தேடுங்கள்.
ஒடுக்கப்பட்டவனை ஆதரித்து, திக்கற்ற பிள்ளைகளின் நியாயத்தையும், விதவையின் வழக்கையும் விசாரியுங்கள், வழக்காடுவோம் வாருங்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார். உங்கள் பாவங்கள் சிவேரென்றிருந்தாலும் உறைந்த மழையைப் போல் வெண்மையாகும், அவைகள் இரத்தாம்பர சிவப்பாயிருந்தாலும் பஞ்சைப் போலாக்கப்படும். நீங்கள் மனம் திரும்பி செவிகொடுத்தால் தேசத்தின் நன்மையைப் புசிப்பீர்கள், மாட்டோம் என்று

எதிர்த்து நிற்பீர்களாகில் பட்டயத்துக்கு இரையாவீர்கள் கர்த்தரின் வாய் அதைச் சொல்லிற்று என்று சொல்லப்பட்டுள்ளது. இந்த கொரோனா காலத்தில் (கடைசி காலத்தில்) நாம் நம்முடைய வேலைகளை விட்டு அவருடைய வேலைகளை கவனித்து, மனம்திரும்பி அவருக்காக வாழவும், அவரைப் பின்பற்றவும் தான், தேவன் நமக்கு இந்த ஜீவனை கொடுத்திருக்கிறார், உயிரைக் கொடுத்திருக்கிறார். ஒருவனும் கெட்டுப் போகாமல் வாழ வேண்டும் என்று தான் நம்மை பூமியிலே உயிரோடு விட்டு வைத்திருக்கிறார். 2 பேதுரு 3:9-ல் அவர் தாமதிக்கிறார் என்று சிலர் எண்ணுகிறபடி கர்த்தர் தமது வாக்குத்தத்தத்தைக் குறித்து தாமதமாயிராமல் ஒருவரும் கெட்டுப்போகாமல் எல்லாரும் மனம் திரும்ப வேண்டுமென்று விரும்பி நம்மேல் நீடிய பொறுமையுள்ளவராயிருக்கிறார். நாம் கெட்டுப்போகாமல் மனம் திரும்பி அவரிடத்தில் வந்து சேரும்போது அல்லது இணைந்து வாழும் போது தேவன் நமக்கு விருந்து வைக்கிறார். புதிய வஸ்திரம் அதுதான் இரட்சிப்பின் வஸ்திரம். நம் திருமணத்திற்கும், மற்றவர்கள் திருமணத்திற்கு போவதற்கென்றும் சில விலையுயர்ந்த ஆடைகளை வைத்திருப்போம். தேவனுடைய விருந்திலே கலந்து கொள்ள இந்த இரட்சிப்பின் வஸ்திரம இல்லாமல் யாரும் பங்கு பெற முடியாது.



மத் 22:11,12-ல் பார்க்கும் போது விருந்தாளிகளைப் பார்க்கும்படி ராஜா உள்ளே ரவேசித்த போது, கலியாண வஸ்திரம் தரித்திராத ஒரு மனுஷனை அங்கே கண்டு சிநேகிதனே, நீ கலியாண வஸ்திரம் இல்லாதவனாய் இங்கே எப்படி வந்தாய்? என்று கேட்டான் அதற்கு அவன் பேசாமலிருந்தான். அப்பொழுது ராஜா பணிவிடைக்காரரை நோக்கி, இவனைக் கையுங்காலும் கட்டிக் கொண்டுபோய் அழுகையும், பற்கடிப்பும் உண்டான புறம்பான இருளிலே போடுங்கள் என்றான். காரணம் தேவன் அவனுக்கு கொடுத்த அந்த இரட்சிப்பின் வஸ்திரத்தை காத்துக் கொள்ளாமல் அதைக் கறைப்படுத்தி அபாத்திரமாய்ப் போய் விட்டான். வெளி 16:15 சொல்லுகிறது இதோ, நான் திருடனைப் போல் வருகிறேன், தன் மானம் காணப்படத்தக்கதாக நிர்வாணமாய் நடவாதபடிக்கு விழித்துக் கொண்டு தன் வஸ்திரங்களைக் காத்துக் கொள்ளுகிறவன் பாக்கியவான் என்று சொல்லப்பட்டுள்ளது. ஒவ்வொரு நாளும் நம்முடைய மனம் புதிதாகுகிறதினாலே, நாம் மனம் திரும்பினோம் என்பதற்கு அடையாளமாக நம்முடைய பழைய வாழ்க்கை ஒழிந்து புதிய மனிதனாக மாற வேண்டும். அப்பொழுது தான் அந்த இரட்சிப்பின் வஸ்திரம் கறைப்படாமல் அது நம்மை மூடிப்பாதுகாக்கும். அப்பொழுது தான் தேவன் ஆயத்தம் பண்ணிய விருந்தில் நாம் கலந்து கொள்ளமுடியும். இதைத்தான் அவர் லூக்கா 15-ஆம் அதிகாரம் முழுவதிலும் சொல்லியிருக்கிறார். இதைத்தான் அவர் இளைய மகனுக்கு, கெட்ட குமாரனுக்குச் செய்தார். அதற்குத்தான் இதோ, வாசற்படியிலே நின்று தட்டுகிறேன். ஒருவன் என் சத்தத்தைக் கேட்டு, கதவைத் திறந்தால் அவனிடத்தில் நான் பிரவேசித்து அவனோடு போஜனம் பண்ணுவேன். அவனும் என்னோடே போஜனம் பண்ணுவான் என்றார். எவ்வளவு பெரிய பாக்கியம், எவ்வளவு பெரிய இரட்சிப்பு. இந்த ஒரு உன்னதமான வாழ்க்கைக்கு நாம் அழைக்கப்பட்டிருக்கிறோம். இயேசு சொன்னார் எல்லாம் ஆயத்தமாயிருக்கிறது வாருங்கள் என்றார். லூக்கா 14:16-24 முடிய சொல்லப்பட்டுள்ளது. ஆனால் அழைக்கப்பட்டவர்கள் சாக்குப்போக்குச் சொல்லி அவரை அசட்டைப்பண்ணி, புறக்கணித்து அபாத்திரராய்ப் போனார்கள். ஆனால் தேவன் விடவில்லை, மீண்டும் கிருபையாய் இரங்கி அந்த வாய்ப்பை ஏழைகள் ஊனர்கள், பட்டணத்தின் வீதிகளில் இருக்கும் பிச்சைக்காரர்கள், குருடர், சப்பாணிகள் பெருவீதிகளில், வேலியேரமாய் இருக்கிற வர்களை அழைத்து வாருங்கள் என்றார். காரணம் அழைக்கப்பட்டவர்கள் அபாத்திரமாய் போய் விட்டார்கள். இன்றைக்கு மனம் திரும்பாமல், தகுதியற்றவர்களாக போகாமல், கர்த்தருடைய சந்நிதானத்தில் போஜனம்பண்ணி விருந்திலே கலந்து கொண்டு ஆட்டுக்குட்டியானவருடைய கலியாணத்திற்கு, பரலோகத்திற்குப் போகிறவர்களாக காணப்பட, மனம் திரும்புதலுக்கேற்ற கனிகளைக் கொடுத்து அந்த விருந்திலே கலந்து கொள்ளுவோம்.இதைத்தான் அவர் கெட்ட குமாரனுக்கு செய்தார் என் ஆண்டவராகிய தேவன்தாமே உங்கள் அனைவரையும் அவருடைய விருந்துக்கு, போஜனத்திற்கு பாத்திரவான்களாக மாற்றுவாராக.

## சத்துருக்களுக்கு முன்பாக விருந்து

என் சத்துருக்களுக்கு முன்பாக நீர் எனக்கு ஒரு பந்தியை ஆயத்தப்படுத்தி, என் தலையை எண்ணெயால் அபிஷேகம் பண்ணுகிறீர். என் பாத்திரம் நிரம்பி வழிகிறது. சங் 23:5. தேவனுடைய விருந்திலே பங்கு கொள்ளுகிறவன் பாக்கியவான் என்றும், மனம் திரும்புகிறவர்களுக்கு இம்மையிலும், மறுமையிலும் விருந்து என்றும் பார்த்தோம். அடுத்ததாக சத்துருக்களுக்கு முன்பாக ஒரு விருந்தை ஆயத்தம் பண்ணுகிறார் என்பதைப் பார்க்கிறோம். என் சத்துருக்கள் என்னைக் காட்டிலும்

பெருகியிருக்கிறார்கள் என்று சங்கீதக்காரன் சொல்லுகிறார். காரணமில்லாத சண்டைகள், காரணமில்லாத போராட்டங்கள், காரணமில்லாத பகைகள், நம்மை வெறுத்து சபித்து நம் முன்னேற்றத்தையும், வளர்ச்சியையும் விரும்பாதவர்கள் நாள்தோறும் ஏதாவது ஒருவகையில் நமக்கு தொல்லை கொடுக்கிறார்கள். இதினிமித்தம் நம்மால் ஜெபிக்க முடியவில்லை, தேவனுடைய காரியங்களில் மனதை செலுத்த முடியாமல் போய் விடுகிறது. இதன் விளைவு நாம் நம்முடைய ஆத்துமாவில் பெலன் இல்லாமல் தொய்ந்து போய் விடுகிறோம். சங் 3:1, சங் 42:9, சங் 83:2 வார்த்தைகளில் எல்லாம் தாவீது அப்படிச் சொல்லுகிறார். காரணம் தாவீது எல்லா காரியங்களிலும் தன் கூட இருந்தவர்களாலும், வெளியே தனக்கு தூரமாய் இருந்தவர்களாலும் நெருக்கப்பட்டு, ஒடுக்கப்பட்டு இருந்தார். இது எல்லாம் சாத்தான் உங்களுக்கு விரோதமாக, மறைமுகமாக தொடுக்கும் யுத்தம். சாத்தான் உங்கள் மேல் வைத்திருக்கிற கோபமும், எரிச்சலும், இப்படிப்பட்ட மறைமுக யுத்தத்தில் நீங்கள் ஒடுங்கி, தொய்ந்து போகாமல் இருக்க தேவன் அந்த சத்துருக்களுக்கு முன்பாக, உங்கள் எதிரிகளுக்கு முன்பாக ஒரு விருந்தை, பந்தியை ஆயத்தம்பண்ணி உங்களை தேற்றுகிறார். உங்கள் தலையை உயர்த்துகிறார். தாவீது சங்கீதம் 92:9-11 வரை கர்த்தாவே, உமது சத்துருக்கள் அழிவார்கள், உமது சத்துருக்கள் அழிந்தே போவார்கள். சகல அக்கிரமக்காரரும் சிதறுண்டு போவார்கள். என் கொம்பை காண்டாமிருகத்தின் கொம்பைப் போல் உயர்த்துவீர். புது எண்ணெயால் அபிஷேகம் பண்ணப்படுகிறேன். என் சத்துருக்களுக்கு நேரிடுவதை என் கண்கள் காணும் என்றார். ஆண்டவராகிய தேவன் நம்முடைய சத்துருக்களுக்கு முன்பாக விருந்தை எப்படி ஏற்பாடு செய்கிறார் தெரியுமா? கோழியோ, ஆடு மாடோ, மிருகங்களின் பலி இரத்தமோ அல்ல, நம்மை சரிசெய்து, சீர்ப்படுத்தி, ஸ்திரப்படுத்தி, பலப்படுத்தி, நிலைநிறுத்துவார். (1பேதுரு 5:8-10) பிசாசுக்கு எதிர்த்து நில்லுங்கள் என்று சொல்கிறவர், நம்மை ஸ்திரப்படுத்தி, பெலப்படுத்தி அவனை மேற்கொள்ள பெலன் தருகிறார். பரிசுத்த ஆவியால் அளவில்லாமல் நிரப்புகிறார். பெலத்தால், ஞானத்தால் அளவில்லாமல் நம்மை நிரப்பி, சத்துருவின் சகல வல்லமையை மேற்கொள்ளவும், யாரும் நம்மை எதிர்த்து நிற்காமல் இருக்க, ஞானத்தின் ஆவியால் நிரப்பி, அவன் தலையை மிதிக்க, மேற்கொள்ள தேவன் உங்களுக்கு பெலன் தருகிறார். லூக்கா 10:19-லும், 21:15-லும் அப்படிச் சொல்லப்பட்டுள்ளது. இப்படியாகத்தான் ஸ்தேவான் விசுவாசத்தினாலும் வல்லமையினாலும் நிறைந்துஜனங்களுக்குள்ளே பெரிய அற்புதங்களைச் செய்து அடையாளங்களினால் தேவனை வெளிப்படுத்தி நிரூபித்தார். காரணம் தேவன் அவரை பரிசுத்த ஆவியினால் அளவில்லாமல் நிரப்பியிருந்தார். அதனால் எவ்வளவு அடி, உபத்திரவம், பாடுகள் வந்தாலும் அது அவனுக்கு பெரியதாக தெரியவில்லை. அவர் ஆவியில் நிரம்பி இருந்தார். அப் 6:8,7, 55 அப்படிச் சொல்லுகிறது. இந்த செய்தியை வாசித்துக் கொண்டிருக்கும் என் அன்பு சகோதர, சகோதரிகளே, இதுவரை இல்லாத அளவுக்கு உங்கள் பாடுகளில், போராட்டங்களில் தேவன் உங்களைப் பெலத்தால் இடைக்கட்டுவார். வல்லமை, வரங்களால் நிரப்புவார். இதுதான் தேவன் நம்முடைய எதிரிக்கு முன்பாக நமக்கு வைக்கும் விருந்து. இப்படியாகத்தான் தாவீதுக்குச் செய்தார். 2 சாமு 3:1-ல் சவுலின் குடும்பத்திற்கும், தாவீதின் குடும்பத்திற்கும் நெடுநாள் யுத்தம் நடந்தது, தாவீது வரவர பலத்தான், சவுலின் குடும்பத்தாரோ பலவீனப்பட்டுப் போனார்கள். ஏன் சவுலின் குடும்பத்தார் பலவீனப்பட்டுப் போனார்கள். அவர்கள் கர்த்தரையோ அவருடைய வல்லமையையோ, அறியவோ, பெறவோ இல்லை. அதனால் ஓய்ந்து போனார்கள், பெலவீனப்பட்டுப் போனார்கள். இன்றைக்கு ஆவியானவர் எங்கு இருக்கிறாரோ, யார் மேல் இருக்கிறாரோ அங்கே விடுதலை உண்டு, ஜெயம், வெற்றி உண்டு. நாம் பெலத்தின் மேல் பெலனடைந்து, தேவ சமூகத்தில் நிலை நிற்கிறவர்களாக தேவன் நம்மை மாற்றுவார். இந்தப் பூமியில் சாத்தானையும் அவன் கிரியைகளையும் அழித்தவர்கள், ஜெயித்தவர்கள் பரலோக விருந்திலே அனுமதிக்கப்படுவார்கள். மட்டுமல்ல நம்முடைய எதிரிகளுக்கு முன்பாக, சத்துருக்களுக்கு முன்பாக நமக்கு அற்புதங்களைச் செய்து கனம் பண்ணுகிறார். லாசருவை உயிரோடு எழுப்பி அவரை நிந்தித்த, பகைத்த அத்தனை பேருக்கு முன்பாக பந்தி விருந்தை வைத்தார். யோவான் 12:1 அப்படிச் சொல்லுகிறது.
இன்றைக்கு அவருடைய பிள்ளையாய் வாழுகின்ற உன்னை தேவன் மறக்கவும் மாட்டார், கைவிடவும் மாட்டார். உன் வாழ்க்கையில் பலத்த அற்புதங்களைச் செய்து, அதிசயங்களைச் செய்து உன் குறைவுகளை நிறைவாக்கி சத்துருக்களுக்கு முன்பாக லாசருவை உயிரோடு எழுப்பி மார்த்தாள், மரியாளை கனம் பண்ணின தேவன், இன்றைக்கு உங்களுக்கும் அப்படிச் செய்வார். அவருடைய ராஜ்யத்தில் போஜனம் பண்ணுகிறவர்களாக, விருந்தில் கலந்து கொள்பவர்களாக உங்களை மாற்றி மகிமையாய்ப் பிரகாசிக்கப்பண்ணுவாராக. பலத்த அற்புதங்களைச் செய்து உங்களை ஆசீர்வதித்து நடத்துவாராக.

# நான் சர்வ வல்லமையுள்ள தேவன் நீ எனக்கு முன்பு நடந்து உத்தமியாயிரு



சகோதரி. கலா வின்சென்ட்ராஜ்

ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவின் இனிய நாமத்தில் அன்பான சகோதரிகளுக்கு வாழ்த்துக்கள்.
நாம் இந்த பூமியில் குறிப்பிட்ட பகுதியில் வாழ்ந்து, நடந்து கொண்டிருந்தாலும் அவருக்கு முன்பாகத்தான் (தேவன்) வாழ்கிறோம். உத்தமனாயிரு என்றால் பழுதில்லாமல் தூய்மையான வாழ்க்கை வாழ்வது. நம் சிந்தனை, சொல், செயல் பாடுகள் எல்லாவற்றிலும் தூய்மை. இதில் தவறுகள் வரும்போது நாம் நம்முடைய பாவநிலையை உணர்ந்து அறிக்கை செய்து ஜெபம் பண்ணுகிறோம். உத்தமம் என்றால் மற்றொரு பகுதி உறுதியாய் இருக்கிறது.

## யார் யார் உத்தமர்களாயிருந்தார்கள்

யார் யார் உத்தமர்களாயிருந்தார்கள்
வேதத்தில் யோபுவைக் குறித்து வாசிக்கும் போது உத்தமனும், சன்மார்க்கனும், தேவனுக்குப் பயந்து பொல்லாப்புக்கு விலகுகிறவன் என்று கர்த்தரரிடத்தில் சாட்சிப் பெற்றிருக்கிறான் என்று யோபு 1:1-லும், 2:3-லும் சொல்லப்பட்டிருக்கிறது. தேவனுக்குப் பயந்து, பொல்லாப்புக்கு விலகினால் நாம் உத்தமன் என்ற பெயரை வாங்க முடியும். ஆதி 6:9-ல் நோவா தன் காலத்தில் வாழ்ந்தவர்களுக்குள்ளே நீதிமானும், உத்தமனுமாயிருந்தான். நோவா தேவனோடு சஞ்சரித்துக் கொண்டிருந்தான். உத்தமன் தேவனோடு உலவுகிறவன், நடக்கிறவன். அவர் சொல்லுகிறதைச் செய்கிறதும், அவர் கட்டளையிடுகிறதை நிறைவேற்றுகிறதும் அவன் வேலை. சங்கீதக்காரன் தாவீது சொல்லும் போது கர்த்தாவே, யார் உம்முடைய கூடாரத்தில் தங்குவான்?, யார் உம்முடைய பரிசுத்த பர்வதத்தில் வாசம் பண்ணுவான்? உத்தமனாய் நடந்து, நீதியை நடப்பித்து, மனதாரச் சத்தியத்தைப் பேசுகிறவன் தானே. சங் 15:1-5. அவன் தன் தேவனோடு வாசம் பண்ணுவான். அவர் கூடாரத்தில் தங்கி உலவுவான் என்கிறான். ஆண்டவர் உபா 1:36-ல் காலேப் மாத்திரம் அதைக் காண்பான். அவன் கர்த்தரை உத்தமமாய் பின்பற்றினபடியால் நான் அவன் மிதித்த வந்த தேசத்தை அவனுக்கும், அவன் பிள்ளைகளுக்கும் கொடுப்பேன் என்று ஆணையிட்டார். உத்தமமாய் பின்பற்றின காலேப் என்று சொல்லி அந்த தேசத்தை சுதந்திரமாகக் கொடுத்தார். அந்த காலேப்பை பற்றி யோசுவா 14:8-ல் ஆனாலும் என்னோடே கூட வந்த என் சகோதரர் என் இருதயத்தை கரையப் பண்ணினார்கள். நானோ என் தேவனாகிய கர்த்தரை உத்தமமாய் பின்பற்றினேன் என்று சொல்லுகிறார். யோசுவா இஸ்ரவேல் ஜனங்களுக்கு ஆலோசனையாக நீங்கள் கர்த்தருக்குப் பயந்து, அவரை உத்தமும், உண்மையுமாகச் சேவித்து, உங்கள் பிதாக்கள் நதிக்கு அப்புறத்திலும், எகிப்திலும் சேவித்த தேவர்களை அகற்றிவிட்டு கர்த்தரை சேவியுங்கள் என்றான். நாமும் கர்த்தரை விட்டு விலகாமல் அவரையே உத்தமமாய் சேவிக்க வேண்டும் என்று சொல்லுகிறார். யோசுவா 24:14. கானான் தேசத்தை சுற்றிப்பார்க்க மோசே அனுப்பின பன்னிரெண்டு கோத்திரங்களின் தலைவர்களில் உத்தமமாய் என்னை பின்பற்றின கேனாசியனான எப்புனேயின் குமாரன் காலேப்பும், நூனின் குமாரன் யோசுவாவும் தவிர எகிப்தில் இருந்து வந்தவர்களில் ஒருவரும் என்னை உத்தமமாய்ப் பின்பற்றவில்லை என்று ஆண்டவர் சொல்லுகிறார். எண் 32:11,12.

## உத்தமமாய் பின்பற்றுவது என்றால் என்ன?

அந்நிய தேவர்களை நம்மை விட்டு அகற்றி விட்டு, கர்த்தரையே சேவிப்பது தான் உத்தமமாய் பின்பற்றுவது. யார் நம்முடைய இருதயத்தைக் கரையப்பண்ணினாலும் ஆண்டவரையே நம்பி அவரையே உறுதியாய் பற்றிக்கொள்வது. 1 ராஜா 15:14-ல் ஆசா ராஜா உயிரோடிருந்த நாளெல்லாம் அவன் இருதயம் கர்த்தரோடே உத்தமமாயிருந்தது என்றும், 11-ஆம் வசனத்தில் கர்த்தரின் பார்வைக்குச் செம்மையானதைச் செய்தான் என்றும் சொல்லப்பட்டுள்ளது. களைகளை அகற்றி விட்டு அந்த நிலத்தை அப்படியே விட்டுவிட்டால் திரும்ப களைகள் முளைப்பது போல, நமக்குள் இருக்கும்

தீமையான காரியங்களை நாம் விட்டுவிடுவது மட்டுமல்ல, நன்மையையும், செம்மையானதையும் செய்ய வேண்டும். உண்மையைப் பேசனும், என்னுடையதல்லாதப் பொருளை எடுக்கமாட்டேன் என்று தீர்மானிக்க வேண்டும். இச்சைகளை விட்டுவிடுவேன் என்று சொல்லி, பரிசுத்தமாய் சிந்திக்க, நடக்க ஆரம்பிக்க வேண்டும் இதைத்தான் தேவன் நம்மிடம் எதிர்பார்க்கிறார். சாலமோன் 1 ராஜா 8:61-ல் சொல்லும் போது ஆதலால் இந்நாளில் இருக்கிறது போல, நீங்கள் அவர் கட்டளைகளில் நடந்து, அவர் கற்பனைகளைக் கைக்கொள்ள, உங்கள் இருதயம் நம்முடைய தேவனாகிய கர்த்தரோடு உத்தமமாய் இருக்கக்கடவது என்றான். எல்லாருக்கும் சொன்ன சாலமோன் ராஜாவால் உத்தமமாய் இருக்க முடியவில்லை? காரணம் 1 ராஜா 11:4-ல் சாலமோன் வயது சென்ற போது, அவனுடைய மனைவிகள், அவன் இருதயத்தை அந்நிய தேவர்களைப் பின்பற்றும்படி சாயப்பண்ணினார்கள். அவன் இருதயம் தன் தகப்பனாகிய தாவீதைப்போல தன் தேவனாகிய கர்த்தரோடே உத்தமமாயிருக்கவில்லை என்று வேதத்தில் சொல்லப்பட்டுள்ளது. யோபு என் ஆவி பிரியும் மட்டும் என் உத்தமத்தை என்னை விட்டு விலக்கேன் என்று 27:5-ல் சொல்கிறார். ஆனால் யோபுவின் மனைவி இன்னுமா நீர் உம்முடைய உத்தமத்தில் உறுதியாய் இருக்கிறீர், தேவனை தூஷித்து விட்டு, ஜீவனை விடும் என்று சொல்லுகிறாள். ஆனால் அத்தனை உபத்திரவங்களிலும் சில அங்கலாய்ப்புகள், வேதனைகளைச் சொல்லி புலம்பினாலும், பொறுமையோடே அத்தனை கஷ்டங்களையும், பாடுகளையும் சகித்துக் கொண்டான். தன் உத்தமத்தில் உறுதியாய் நின்றான். யோபுவைப் போல நாமும், நம் வாழ்க்கையில் எந்த சூழ்நிலை வந்தாலும் கர்த்தரை உத்தமமும், உண்மையுமாய் பின்பற்றி, இழந்ததை எல்லாம் திரும்பப் பெற்றுக்கொள்வோம். எஸ்தர் வாழ்வில் கூட அவள் தன்னை அலங்கரித்துக் கொள்ள பிரதானி என்ன கொடுத்தாரோ அதைத் தவிர, தேவையற்ற அலங்காரங்கள் அவளிடத்தில் இல்லாததினால் பிரதானியிடத்திலும், ராஜாவினிடத்திலும் அவளுக்குத் தயவும், கிருபையும் கிடைத்தது. அவள் உத்தமமாய் இருந்ததால் தான் அவள் சிரசில் கிரீடம் சூட்டப்பட்டது. தாவீதைப் பாருங்கள் ஆண்டவரால் என் இருதயத்திற்கு ஏற்றவன், எனக்குச் சித்தமானதையெல்லாம் அவன் செய்வான் என்று பெயர் பெற்றவன். 1 நாளா 29:17-ல் என் தேவனே, நீர் இருதயத்தைச் சோதித்து, உத்தம குணத்தில் பிரியமாயிருக்கிறீர் என்பதை அறிவேன். நான் உத்தம இருதயத்தோடே மனப்பூர்வமாய்க் கொடுத்தேன். இப்பொழுது இங்கே இருக்கிற உம்முடைய ஜனமும் உமக்கு மனப்பூர்வமாய்க் கொடுக்கிறதைக் கண்டு சந்தோஷித்தேன் என்று தாவீது ராஜா சொல்லுகிறதை வாசிக்கிறோம். உத்தம குணத்தில் தேவன் பிரியமாய் இருக்கிறார். கொடுப்பதற்கு கூட நமக்கு உத்தம இருதயம் வேண்டும். பத்தில் ஒரு பகுதியை நாம் கர்த்தருக்குக் கெடுக்கனும், அதை நாம் திருடக்கூடாது. உத்தம குணம் எப்போதும் நமக்கு இருக்கனும், அதில் தேவன் பிரியப்படுகிறார். தாவீதை தேவன் இருதயத்துக்கு ஏற்றவன் என்றதற்கு காரணம் அவன் இருதயத்தில் கர்த்தரை உத்தமமாய் பின்பற்றினான். உத்தம இருதயத்தோடு கர்த்தருக்கு கொடுத்தான். தாவீதைப் போல உத்தம இருதயத்தோடு கர்த்தருக்காக மனப்பூர்வமாய் கொடுத்து தேவ ஆசீர்வாதத்தைப் பெற்றுக் கொள்ள நமக்கும் தேவன் கிருபை செய்வார்.

## எது உத்தமம்

சாமுவேல் வரத்தாமதமாகிற போது ஜனங்கள் எல்லாரும் சிதறிப் போகிறார்கள் என்று சவுல் கண்டு அவசர அவசரமாக கர்த்தருக்குப் பலி செலுத்துகிறான். என்ன செய்வது என்று தெரியாத பதட்டத்தில் நாம் கூட பல தவறுகளை செய்து விடுவோம்.. நான் இன்று தேவ சத்தத்தை கேட்டேனா? அவர் வார்த்தைக்கு கீழ்ப்படிந்தேனா? என்று பார்க்காமல் கர்த்தருடைய வார்த்தையை நிறைவேற்றினேன் என்று தனக்குள் நினைத்துக் கொண்டிருந்தான். 1 சாமு 15:22-ல் அதற்குச் சாமுவேல் கர்த்தருடைய சத்தத்திற்கு கீழ்ப்படிகிறதைப் பார்க்கிலும், சர்வாங்க தகனங்களும், பலிகளும் கர்த்தருக்குப் பிரியமாயிருக்குமோ? பலியைப்பார்க்கிலும், கீழ்ப்படிதலும், ஆட்டுக்கடாக்களின் நிணத்தைப்பார்க்கிலும் செவிகொடுத்தலும் உத்தமம் என்று சொல்லுகிறார். சவுல் கர்த்தருடைய சத்தத்திற்கு செவிகொடுக்கவில்லை. நாம் ஆண்டவருடைய வார்த்தைக்குச் செவிகொடுத்தால் நம் வாழ்வில் சமாதானம் நதியைப் போல இருக்கும். சங் 81:13,14



ஆ, என் ஜனம் எனக்குச் செவிகொடுத்து, இஸ்ரவேல் என் வழிகளில் நடந்தால் நலமாயிருக்கும். நான் சீக்கிரத்தில் அவர்கள் எதிராளிகளைத் தாழ்த்தி, என் கையை அவர்கள் சத்துருக்களுக்கு விரோதமாகத் திருப்புவேன் என்று தேவன் சொல்கிறார். நாம் தேவனுடைய வழிகளில் நடப்பது உத்தமம், அப்பொழுது தேவன் நம்முடைய சத்துருக்களுக்கு விரோதமாய் அவர் கையைத் திருப்பி, அவர்களைத் தாழ்த்திப்போடுவார். 2 கொரி 10:18 தன்னைத்தான் புகழுகிறவன் உத்தமன் அல்ல. கர்த்தரால் புகழப்படுகிறவனே உத்தமன். நாம் மனிதர்களால் புகழப்படுவதைப் பார்க்கிலும் கர்த்தரால் புகழப்படுகிறவர்களாக இருக்க வேண்டும். நீதி 16:32-ல் பலவானைப்பார்க்கிலும் நீடிய சாந்தமுள்ளவன் உத்தமன். பட்டணத்தைப் பிடிக்கிறவனைப் பார்க்கிலும் தன் மனதை அடக்குகிறவன் உத்தமன், தாயின் பால் மறந்த குழந்தையைப் போல், நம்மை அடக்கனும் என்று வேதம் சொல்லுகிறது. பிரசங்கி 7:8-ல் ஒரு காரியத்தின் துவக்கத்தைப் பார்க்கிலும், அதின் முடிவு நல்லது. பெருமையுள்ளவனைப் பார்க்கிலும் பொறுமையுள்ளவன் உத்தமன். நான் உத்தமனாக நீடிய பொறுமை வேண்டும். பெருமையல்ல பொறுமையே நமக்குள் உருவாக வேண்டும், அதற்குத் தான் நமக்கு அநேக உபத்திரவங்கள், பாடுகள் வருகிறது. உபத்திரவப்படும் போது பல சிரமங்களை அனுபவிக்கிற நாம் பொறுமையைக் கற்றுக் கொள்கிறோம். தாழ்மை நமக்குள் உண்டாகிறது. நீதி 16:16-ல் பொன்னைச் சம்பாதிப்பதிலும், ஞானத்தை சம்பாதிப்பது எவ்வளவு உத்தமம். எந்த ஒரு காரியத்திலும் ஞானம் நமக்கு தேவை. சிறுபிள்ளைகள் முதல் முதியோர் வரை இந்த ஞானத்தைப் பெறுவது அவசியம். ஞானம் இல்லாமல் எந்த ஒரு காரியத்தையும் செய்தால், அது நமக்கும் மற்றவர்களுக்கும் பல பாதிப்புகளை ஏற்படுத்தி விடும். இந்த ஞானத்தைக் கர்த்தர் நமக்குத் தருகிறார். அவரிடம் நாம் கேட்கனும், அப்போது தான் ஞானத்தை நாம் பெற்றுக்கொள்ள முடியும், சம்பாதிக்க முடியும். இந்த ஞானம் தான் எதை, எந்த நேரத்தில், எப்படிச் செய்யனும் என்று கற்பிக்கிறது. இதை இந்த நேரத்தில் இப்படி பேசி விடாதே, செய்துவிடாதே என்று போதிக்கிறது. இயேசுவே நமது ஞானம், வேதமே நமது ஞானம் என்று வேதம் சொல்லுகிறது. இயேசு நமக்குள் வர நாம் இடமளித்தால், வேத வசனங்களை நமக்குள் மனப்பாடம் செய்து, இருதயத்தில் ஏற்றிக் கொண்டால் நாம் படுத்தால் அது நம்மோடு சம்பாஷிக்கும், நடந்தால் இது தான் வழி என்று காட்டும், நாம் தவறுகிறவைகளைச் சுட்டி காட்டும். இந்த ஞானத்தைப் பெற்றிருப்பது உத்தமம் என்று வேதத்தில் சொல்லப்பட்டுள்ளது.

## எப்படி நாம் உத்தமமாக முடியும்

எப்படி நாம் உத்தமமாக முடியும். சங்கீதத்தில் தாவீது சங் 19:12,13 தன் பிழைகளை உணருகிறவன் யார்? மறைவான குற்றங்களுக்கு என்னை நீங்கலாக்கும். துணிகரமான பாவங்களுக்கு உமது அடியேனை விலக்கிக்காரும். அவைகள் என்னை ஆண்டு கொள்ள ஒட்டாதிரும். அப்பொழுது நான் உத்தமனாகி பெரும்பாதகத்துக்கு நீங்கலாயிருப்பேன் என்று ஜெபிக்கிறதைப் பார்க்கிறோம். இது நல்ல அருமையான ஜெபம். தன் பிழைகளை உணர்ந்து ஜெபிப்பது. யாக்கோபு 1:12-ல் சோதனையைச் சகிக்கிற மனுஷன் பாக்கியவான், அவன் உத்தமனென்று விளங்கினபின்பு கர்த்தர் தம்மிடத்தில் அன்பு கூருகிறவர்களுக்கு வாக்குத்தத்தம் பண்ணின ஜீவகிரீடத்தைப் பெறுவான். சோதனையை சகிக்கும் போது நாம் உத்தமர்களாக விளங்கமுடியும். உன் தேவனாகிய கர்த்தர் சூரியனும், கேடகமுமனவர், கர்த்தர் கிருபையையும், மகிமையையும் அருளுவார், உத்தமமாய் நடக்கிறவர்களுக்கு நன்மையை வழங்காதிரார் என்று சங் 84:11 சொல்லுகிறது. நம் தேவனாகிய கர்த்தர் பார்வையில் நாம் உத்தமமாய் வாழ நம்மை அர்ப்பணிப்போம். அதனால் தான் ஆண்டவர் நீ எனக்கு முன்பாக நடந்து கொண்டு உத்தமனாயிரு, உத்தமியாயிரு என்று சொல்கிறார். என் ஆண்டவர் தாமே இதை வாசிக்கிற ஒவ்வொருவரையும் அவரது பார்வையில் உத்தமர்களாக மாற்றுவாராக.




இலவசம்! இலவசம்! இப்பொழுது

இயேசுவை தினம் பார்க்கிறேன் E - Publication பத்திரிக்கையை நமது இயேசு வாழ்கிறார் ஊழியத்தின் இணையதளம், ஊழிய வளைதள பககங்களிலும் மற்றும் உங்கள் What's app-ல் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்!. What's app-ல் பெற 944 28 00 449 என்ற எண்ணிற்கு "Send Magazine" என Type செய்தால் உடனடியாக உங்களுக்கு பத்திரிக்கை அனுப்பப்படும். இணையதளம் மற்றும் சமூக வளைதளங்களில் பெற
www.jesuslives.in/resources
Facebook, Youtube ,Instagram & jesuslives.in
பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

Jesus Lives MINISTRIES

ஜீலை 09
10am-2pm

மாதந்தோறும் இரண்டாவது சனிக்கிழமை

செம்பட்டியில்

# உபவாச ஜெபம்

நேரடி கூடுகை
PHYSICAL GATHERING



**இடம்:**
வானத்தின் வாசல் எழுப்புதல் ஜெப மையம்
செம்பட்டி, திண்டுக்கல் மாவட்டம்

**தேவ செய்தியாளர்கள்**
சகோ. L.வின்சென்டராஜ்
சகோதரி. கலா வின்சென்ட்ராஜ்.

SUBSCRIBE AND WATCH ON JESUS LIVES MINISTRIES



**பத்திரிகை ஊழியத்தை தாங்குங்கள்**

வாசகர்கள் வாசிப்பதற்கு எளிதாக நமது இயேசுவை தினம் பார்க்கிறேன் மாத இதழ் கலரில் அச்சடிக்கப்பட்டு வெளிவர தேவன் கிருபைசெய்தார்.
உங்கள் சந்தாவை இனி G-PAY மூலம் செலுத்தலாம் மற்றும் இந்த ஆண்டிற்கான உங்கள் சந்தாவை புதுப்பிக்க மறவாதிருங்கள். G Pay +91 944 3009 333

இயேசு வாழ்கிறார் ஊழியத்தின் புதிய பரிமானம்

# SCHOOL OF EVANGELISM

## சுவிசேஷ பயிற்சிப் பள்ளி

## நீங்கள் சுவிசேஷகராக விருப்பமா?







## வாருங்கள் சுத்த சுவிசேஷத்தை பரவச் செய்வோம்

சுவிசேஷப்பயிற்சிப் பள்ளியின் நோக்கம் என்னவென்றால் சுவிசேஷத்தை அறிவிப்பவர்கள் குறைந்து விட்டார்கள், சுவிசேஷ ஊழியம் மங்கிக் கொண்டிருக்கிறது. தேசத்தின் இருளான நிலையை மாற்ற, சுவிசேஷத்தை எங்கும் அறிவிக்கிற, சுவிசேஷ தலைமுறையை எழுப்ப வேண்டும், அவர்கள் முறையாக, தெளிவாக சுவிசேஷம் அறிவிப்பதற்கும், புரிந்து கொள்வதற்கும், அந்த தரிசனத்தைப் பெற்றுக் கொண்டு வளர்வதற்கும், தேவன் தன் கையில் கொடுத்திருக்கும் பணியை மிகச்சிறப்பாக செய்வதற்கு உதவுவதாகும்.

**வருடத்திற்கு நான்கு அணிகளாக (ஜனவரி, ஏப்ரல், ஜீலை, அக்டோபர்)**
**ஆகிய மாதங்களில் சுவிசேஷ பயிற்சிப்பள்ளி நடைபெறுகிறது 6 நாட்கள், 6 பயிற்சியாளர்கள்**

### பயிற்சியை பற்றிய தகவல்கள்

- நீங்கள் மிகுந்த ஜெபத்துடன் முகாமில் பங்கு கொள்ள வேண்டும்
- பயிற்சியின் ஆறு நாட்களும் தலைசிறந்த சுவிசேஷகர்களால் உங்களுக்கு பயிற்சி வழங்கப்படும்.
- தினமும் இரண்டு பகுதியாக ஜெபமும், களப்பணியும் பயிற்சி தரப்படும்
- தங்கும் இடம் மற்றும் மூன்று வேலை உணவும் வழங்கப்படும்
- பயிற்சியின் முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்.
- பெண்களுக்கு தனியாக தங்குமிடம் உண்டு.

**உடனே படிவத்தை பூர்த்தி செய்யுங்கள்**

**soe.jesuslives.in**

மேலும் தொடர்புக்கு:

**9498000449**



# உங்களுக்கான அடையாளம்

## அவன் இப்பொழுது ஜெபம் பண்ணுகிறான்



வாலிபர் பகுதி

சகோதரி. பிரேமா டேவிட்

கிறிஸ்துவில் அன்பான வாலிபத்தம்பி, தங்கைகளே, கிறிஸ்தவர்களின் மத்தியில் அதிகப் பிரபல்யமான ஒரு வார்த்தை என்னவென்றால் அது ஜெபம் தான் என்று உங்கள் அனைவருக்கும் நன்கு தெரியும். இன்று ஜெபம் செய்தீர்களா? என்ற ஸ்டிக்கர் உங்கள் கண்களில் அடிக்கடி பளிச்சிட்டிருக்கும். ஜெபமே என் வாழ்வின் செயலாக மாற, ஜெப ஆவியால் என்னை நிரப்பிடுமே என்ற பாடலை உங்களில் சிலர் உள்ளமுருக பாடியிருப்பீர்கள் அல்லது பாடக் கேட்டிருப்பீர்கள். தம்பி ஜெபம் பண்ணு, ஜெபம் பண்ண வா எனறு உங்க போதகரோ, ஆலோசனை சொன்ன அக்காவோ, அண்ணனோ, உங்கள் பெற்றோரோ சொன்னதைக் கேட்டு ஜெபிக்கத் துவங்கி அல்லது ஜெபித்துக் கொண்டிருக்கீர்களா? அல்லது இவங்களுக்கு வேற வேலையில்லை என்று சொல்லி ஜெபத்தை அசட்டை செய்கிறீர்களா? அல்லது அவங்க சொல்றாங்க அதனால செய்வோம் என்று ஏனோ தானோ வென்று பிரையர் பண்றீங்களா? இன்றைக்கும் நாம பைபிள இருந்து ஒரு வாலிபரைப் பற்றியும், அவர் வாழ்க்கையில் எப்படி ஜெபம் பண்ணுகிறவராக மாறினார் என்றும் அறிந்து கொள்ளப் போகிறோம்.

### சவுலாயிருந்த போது

சவுல் என்ற யூத மதத்தைச் சேர்ந்த வாலிபன், கனம் பெற்ற நியாயசாஸ்திரியாகிய கமாலியேல் என்பவரிடத்தில் முன்னோர்களுடைய நியாயப்பிரமாணத்தைக் கற்றுக்கொண்டு, தேவனைக் குறித்து மிகவும் பக்தி வைராக்கியமாய் இருந்தவன் என்று அப் 5:34-லும் அப் 22:34—லும் சொல்லப்பட்டுள்ளது. யூத மார்க்கத்திற்கு மாறான ஒரு புதிய உபதேசத்தை செய்தவரான இயேசுவுக்கும், அவரை பின்பற்றுகிற மக்களுக்கும் விரோதமாய், மூர்க்கவெறி கொண்டு அவர்களைப் பிடித்து சிறையில் அடைப்பதும், துன்பப்படுத்துவதும், அவர்களை கொலை செய்யுமளவுக்கு அதில் தீவிரவாதியாய் இருந்தவன் சவுல். ஒருமுறை தர்சுவிலிருந்து தமஸ்குவிலுள்ள ஜெப ஆலயங்களுக்கு சென்று, அந்தப் பகுதியில் கிறிஸ்துவைப் பின்பற்றுகிறவர்களைப் பிடித்து எருசலேமுக்கு கொண்டு போக வேண்டும் என்று அங்கு பிரயாணம் போய்க் கொண்டிருந்த போது, திடீரென்று வானத்திலிருந்து ஒரு ஒளி அவனைச் சுற்றிப் பிரகாசித்தது. அவன் கீழே விழுந்தான். சவுலே, சவுலே நீ என்னை ஏன் துன்பப்படுத்துகிறாய்? என்ற ஒரு சத்தத்தைக் கேட்டு ஆண்டவரே நீர் யார்? என்றான். அதற்குக் கர்த்தர், நீ துன்பப்படுத்துகிற இயேசு நானே, முள்ளில் உதைக்கிறது உனக்குத் தான் கஷ்டம் என்றார். அவன் நடுங்கித் திகைத்து, ஆண்டவரே, நான் என்ன செய்ய சித்தமாயிருக்கிறீர் என்றான். அதற்குக் கர்த்தர் நீ எழுந்து, பட்டணத்திற்குள்ளே போ, நீ செய்ய வேண்டியது அங்கே உனக்குச் சொல்லப்படும் என்றார். (அப் 9:1-18) சவுலோடு கூட நின்றவர்கள் யாரோ, இவரோடு பேசுகிறார்கள். யாரையும் காணோமே என்று ஆச்சரியப்பட்டு தமஸ்குவுக்கு அழைத்துக் கொண்டு போனார்கள். மூன்று நாளாய் சவுலுக்குப் பார்வை தெரியவில்லை. அனனியா என்ற ஊழியர் உனக்காய் ஜெபிப்பார், அப்பொழுது உன் கண்கள் திறக்கப்படும் என்று, சவுலோடு பேசின ஆண்டவர் தமஸ்குவிலுள்ள அனனியா என்ற சீஷரிடத்திலும் பேசினார். நீ எழுந்து நேர்த் தெருவிலுள்ள யூதா என்பவரின் வீட்டிற்குப் போய்

சவுல் என்பவரைப் பார். அவன் இப்பொழுது ஜெபம் பண்ணுகிறான் என்றார்.

## சரணடைந்த போது

சவுலுக்கு தேவனைக் குறித்த பக்தி வைராக்கியம் இருந்தது. ஆனால் தேவனுக்கும், சவுலுக்கும் எந்தவித உறவும், நெருக்கமும், தொடர்பும் இல்லை. ஜெப ஆலயங்களுக்கு அடிக்கடிப் போய் வந்ததும், ஜெபம் பண்ணியும் பழக்கமில்லை. வேதத்தையே கற்றுத் தேர்ந்தவன் தான், மாற்றம் ஒன்றுமில்லை தனக்கும் தன் மதத்திற்கும் ஒத்துவராத எவரையும், மனதளவிலும் சரீரத்திலும் துன்பப்படுத்தி சந்தோஷப்பட்ட சவுல் இப்பொழுது ஜெபம் பண்ணுகிறான். எப்படி இந்த மாற்றம் வந்தது?. சவுல் நினைத்தான் இயேசுவைப் பின்பற்றுகிறவர்களைத் தான் துன்பப்படுத்துகிறோம் அதனால் தேவனுடைய பிரியத்தைப் பெற்றுக் கொள்ளலாமென்று நினைத்தான். ஆனால் ஆண்டவர் சவுலைப் பார்த்து நீ துன்பப்படுத்துகிற இயேசு நானே என்றார். ஆண்டவரே நேரடியாக தரிசனமாகி, அவனோடு பேசின போது, ஆண்டவரை ஒருவரும் எதிர்த்து நிற்க முடியாது, எந்த அதிகாரமும், அறிவும், அந்தஸ்தும், பட்டமும், பதவியும் ஒன்றும் செய்ய முடியாது என்பதைப் புரிந்து கொண்டு சவுல் ஆண்டவரே, நான் என்ன செய்யனும்-னு உங்க விருப்பமோ, சித்தமோ அதை செய்ய என்னை ஒப்புக்கொடுக்கிறேன் என்று உடனடியாக ஆண்டவரிடம் சரணடைந்தார். போலீஸ் திருடனைப் பிடிக்கும் போது பிடிபட்டவன் இரண்டு கைகளை மேலே தூக்குவது போல சரண்டர் ஆனா சவுலால் இனி இயேசுவை வேதனைப்படுத்த முடியாது. அவருக்குப் பிரியமானவைகளைச் செய்ய அவன் மனம் நாடினது. ஐயோ, இதுவரை நான் செஞ்சதெல்லாம் தவறு, இனி என்ன செய்யனும் என்று நினைத்த போது ஜெபம் பண்ணனும் என்கிற உணர்வு வந்தவுடன் அவன் உடனே ஜெபம் பண்ணுகிறான். இயேசுவுக்கு எதிராயிருந்தவன், அவர் தன்னைச் சந்தித்தவுடன் என்னை மன்னிச்சிருங்கப்பா, இனி நான் உங்க அடிமை, உங்க பிள்ளை, நீரே என் ஆண்டவர், நீரே என் இரட்சகர் என்று அறிக்கையிட்டு தான் மனந்திரும்பினதை, இரட்சிக்கப்பட்டதை வெளிப்படுத்தி அவன் இப்பொழுது ஜெபம் பண்ணுகிறான் என்று ஆண்டவரே அனனியாவிடம் சொல்லுகிறார். இதை வாசிக்கும் அருமையான தம்பி, தங்கையே, நீங்க எந்த தெருவில், எந்த வீட்டில் இருக்கிறீங்க, என்ன செய்றீங்க என்று உங்களைப் பற்றிய அனைத்தையும் அறிந்த ஆண்டவர் இயேசுவை ஏன் இன்னும் எதிர்க்கிறீர்கள். அவராலேயன்றி வேறே எவராலும், வேறே எதினாலும் இரட்சிப்பு இல்லை. அப் 4:12. நடிகர்களோ, அரசியல் வாதிகளோ, ஸ்போர்ட்ஸ் மேனோ இல்லை.



உங்களை ஆண்டவர் பார்க்கும் போது உங்க கையில் செல்போனும், தேவையற்ற காரியங்களும், பேச்சுக்களும், தகாத நட்புகளும் இருந்தால், எப்பவும் நண்பர்கள், ரவுண்ட்ஸ் என்றிருந்தால் ஆண்டவர் என்ன சாட்சி சொல்லுவார். ஒரு காலத்தில் எதிரியாயிருந்த சவுல் தான், ஆனா இப்ப இயேசு சந்தித்தவுடன் மாற்றத்திற்கான அடையாளம் தெரிஞ்சிருச்சு. தம்பி, தங்கை இனியும் தாமதிக்காதே, சாக்குப்போக்கு சொல்லாதே, உன் பாவங்களை அறிக்கையிடு, இயேசுவை உன் ஆண்டவராய் ஏற்றுக்கொள். உனக்கான அடையாளமான ஜெபத்தை இப்பொழுதே துவங்கு. இதோ இப்பொழுதே அநுக்கிரக காலம், இப்பொழுதே இரட்சண்ய நாள். 2 கொரி 6:2. நிச்சயமாய் உங்களோடு இருப்பவர்கள் உங்களைக் குறித்து சாட்சி சொல்லுவார்கள் அவன்(ள்) இப்பொழுது ஜெபம் பண்ணுகிறான்(ள்) என்று. எப்போதும் சோர்ந்து போகாமல் ஜெபம் பண்ண வேண்டும். (லூக்கா 18:1. 1 தெச 5:17) ஜெபம் பண்ணின பவுலை கர்த்தர் வல்லமையாய் பயன்படுத்தினது போல உங்களையும் கர்த்தர் வல்லமையான சாட்சியாய் பயன்படுத்துவாராக.



# அந்த ஒரு சிறுமியின் கண்ணீர் ஜெபம்

ஹலோ குட்டீஸ் நல்லாயிருக்கீங்களா!.
19 வயது அந்த அண்ணனுக்கு இளைப்புநோய் வந்து ரொம்ப முடியாமற் போயிருச்சு. எவ்வளவு வைத்தியம் பார்த்தாலும் இது சரியாகாத வியாதி, நீ மூன்று மாசம் தான் உயிரோடே இருப்பனு டாக்டரும் சொல்லிட்டாங்க. இனி நம்ம பிழைக்க மாட்டோம்னு தெரிஞ்சாலும், அவர் கும்பிடுகிற புத்தரை இன்னும் ரொம்ப நம்பிக்கையோடு கூப்பிட்டாரு. அந்த அண்ணனுக்கோ உடம்புல மற்றம் ஒன்னும் நடக்கல்ல, கூடக்கொஞ்சந்தான் முடியாமற் போயிருச்சு, படுத்த படுக்கையாயிட்டார். அப்பத்தான் உங்கள மாதிரி ஸ்கூல்ல படிக்கிற ஒரு சிறுமி, அந்த அண்ணன் வீட்டுக்குப் போனாள். இயேசப்பா பத்தி சொல்லி, நம்ம எல்லாருடைய நோயையும் தன் மேல் ஏற்றுக்கொண்டு சிலுவையில் நமக்காக இயேசப்பா மரிச்சாரு, அவரை நம்புங்க அண்ணே என்று சொன்னாள். அந்த அண்ணன் அவள் சொன்னதைக் கேட்கவே இல்லை. ஏன்னா அந்தளவுக்கு அவருக்கு ரொம்ப முடியலை. மறுநாளும் வந்தாள், சொன்னாள். அந்த அண்ணனுக்கு ரொம்ப கோபம் வந்துருச்சு. கிறிஸ்தவ நாயே வீட்டை விட்டு வெளியே போனுன்னு சொல்லிட்டாங்க. ஆனாலும் அந்த சிறுமி விடாமல் தினமும் சென்று (திட்டினாலும்) முழங்கால்படியிட்டு, அந்த அண்ணனுக்காக கண்ணீரோடு ஜெபித்தாள். அவளுடைய கண்ணீர் அந்த அண்ணனின் இருதயத்தைத் தொட்டது. ஆண்டவருடைய சமூகத்தை அந்த அண்ணன் உணர்ந்தாங்க. புத்த மதத்தில் யாரும், யாருக்காகவும் இப்படி கண்ணீரோடு ஜெபிப்பது கிடையாதே. ஏன் இவள் எனக்காக கண்ணீர் வடித்து ஜெபம் பண்ணனும் என்ற உணர்வுடன் இருந்த அந்த அண்ணனிடம் ஒரு பைபிளையும் கொடுத்து, மத்தேயுத்தகத்திலிருந்து படிக்க ஆரம்பியுங்கள் என்று சொன்னாள். அந்த அண்ணனும் பைபிளைப் படித்தாங்க. இயேசுகிறிஸ்து உண்மையான தெய்வம், அவர் தான் நம்ம பாவங்களை மன்னிக்கவும், நம்முடைய நோய்களைக் குணமாக்கவும் வந்த உலக இரட்சகர் என்பதைப் புரிந்து கொண்டாங்க. மருத்துவர்களும், மற்றவர்களும் புரிந்து கொள்ளும்படியாக ஆண்டவர் அந்த அண்ணனை சுகப்படுத்தினாங்க. அதற்கப்புறம் அவங்க பெரிய பாஸ்டராகிட்டாங்க. அவங்க சர்ச்சுக்கு 10 லட்சம் பேரு வர்றாங்க. 19 வயசில மரிக்க இருந்த அவங்க ஆண்டவர் கொடுத்த ஜீவனாலே கடந்த ஆண்டு வரை வாழ்ந்தாங்க, இயேசப்பாவுக்கு ஊழியம் செய்தாங்க. கடந்த ஆண்டு தனது 86-வது வயதில் தான் இறந்தாங்க. நம்ம இந்தியாவுக்குக் கூட இரண்டு தடவை ஊழியம் செய்ய வந்திருக்காங்க. ஆண்டவரை அறியாத அந்த அண்ணன் தான் பின்நாட்களில் பாஸ்டர்.பால்யாங்கிசோ என்ற தலைசிறந்த தேவ ஊழியராக மாறினார். ஒரு சிறுமியின் கண்ணீரின் ஜெபம் தான் அதற்குக் காரணம். அன்பான குட்டீஸ் அந்த சிறுமியைப் போல நீங்களும் அம்மா, அப்பாவுக்கும், மற்றவங்களுக்கு இயேசப்பா பற்றி சொல்லி கண்ணீரோடு ஜெபிப்பீங்களா?.

## ஜெபம்

அன்புள்ள இயேசப்பா எங்க தேசத்தில் உங்களை அறியாமலும், வியாதியிலும் இருக்கிற எல்லா அண்ணன், அக்காவுக்காக கண்ணீரோடே ஜெபிக்கிறேன். உங்களை அவங்க அறிந்து கொள்ளவும், சுகமாயிருக்கவும் உதவி செய்யுங்க. ஆமென்

## மனப்பாட வசனம்

கண்ணீரோடே விதைக்கிறவர்கள், கெம்பீரத்தோடே அறுப்பார்கள்.
சங்கீதம் 126:5





# பாவூர்ச்சத்திரம் நற்செய்தி பெருவிழா

கடந்த மே மாதம் 27.28.29-ஆகிய தேதிகளில் பாவூர்சத்திரம் வி.ஏ நகரில் வைத்து தினமும் மாலை 6.30 மணிக்கு நற்செய்தி கூட்டங்கள் வெகு சிறப்பாக நடைபெற்றது. எழுப்புதல் சுவிசேஷ ஜெப ஐக்கியத்தினர் கூட்டத்தை சிறப்பாக ஒழுங்கு செய்திருந்தார்கள். தேவன் அவர்களை இன்னும் அதிகமாய் இநத சுவிசேஷப் பணியில் பயன்படுத்தி, ஆசீர்வதிப்பாராக. திரளான ஜனங்களும், தேவ ஊழியர்களும் இக்கூட்டத்தில் கலந்து கொண்டு ஆவிக்குரிய வாழ்க்கையில் பெலப்படவும், தேவ வார்த்தையினால் நிரப்பப்படவும், சரீரசுகத்தைப் பெற்றுக் கொள்ளவும் தேவன் அனுக்கிரகம் செய்தார். இக்கூட்டங்களில் தேவன் சகோதரி. கலா வின்சென்ட்ராஜ் அவர்கள் நடத்திய பாடல்கள், ஆராதனைகள் மூலம் அநேகர் தொடப்பட்டார்கள். சகோதரர். வின்சென்ட்ராஜ் அவர்கள் கொடுத்த தேவவார்தையின் மூலம் தேவன் அநேகருடைய இருதயத்தை திறந்தருளினார், தேவசித்தம் செய்ய அர்ப்பணிக்க வைத்தார். கடுமையாக காற்று வீசின சூழ்நிலையிலும் கூட்டங்கள் தடையில்லாமல் நடத்த தேவன் கிருபை செய்தார்.

# நம்பிக்கையின் தேவன் செய்த நன்மைகளில் சில



**சகோதரி. ஸ்டெல்லா ரோஸ்லின் திண்டுக்கல்.**

நான் திண்டுக்கல் மாவட்டம் மேட்டுப்பட்டியில் இருக்கிறேன். இந்த வானத்தின் வாசல் ஜெபத்திற்கு வந்து அநேக நன்மைகளை, ஆசீர்வாதங்களை பெற்றுள்ளேன். கடந்த பிப்ரவரி மாதத்தில் என் கணவருக்கு நீர் கட்டி ஆப்ரேஷன் செய்ய வேண்டும் என்று மருத்துவர்கள் சொல்லி விட்டார்கள். நான் சகோதரி கலா வின்சென்ட்ராஜ் அவர்களிடம் ஜெப உதவியை நாடினேன். அவர்களும் எங்களுக்காக பாரத்தோடு ஜெபித்தார்கள். தேவன் ஆப்ரேஷனில் எந்த பிரச்சனையும் இல்லாமல் நல்லபடியாக முடியவும், நல்ல சுகத்தோடு வீடு திரும்பவும் கிருபை செய்தார். இயேசப்பாவுக்கு ஸ்தோத்திரம்.

**சகோதரி. செல்வி தேத்தாம் பட்டி**

நான் பூசாரி குடும்பத்தை சேர்ந்தவள். இயேசுவை ஏற்றுக் கொண்டதின் நிமித்தம் என் குடும்பத்தினர் என்னை வீட்டை விட்டு விலக்கி வைத்துவிட்டார்கள். கடந்த 2 வருடங்களாக பக்கத்து ஊரில் நான் தனியாக ஒரு வீடு வாடகைக்கு எடுத்து, மில் வேலை பார்த்து வந்தேன். இயேசுவுக்காக வைராக்கியமாக வாழ்ந்து வந்தேன். அப்பொழுது ஒரு பொருத்தனையோடு வானத்தின் வாசலில் நடந்த உபவாச ஜெபத்தில் கலந்து கொண்டு நான் சாட்சி சொல்லுவேன் என்று ஜெபித்து விட்டுச்சென்றேன். 2 வருடங்களுக்குப் பிறகு என் கணவர், பிள்ளைகள், சொந்தங்கள் என்னை சேர்த்துக் கொண்டார்கள். ஆனால் ஒரு கண்டிஷன் போட்டார்கள் யாரிடமும் இயேசுவைப்பற்றி பேசக்கூடாது, ஜெபம் செய்யக் கூடாது என்று. ஆனால் நான் வீட்டில் ஜெபம் செய்வேன். தேவன் என் கணவர், என் வாலிபப் பிள்ளைகளைத் தொட்டார், அவர்களை மாற்றினார். தற்போது அவர்களும் என்னோடு சேர்ந்து ஜெபம் செய்வார்கள். ஒருநாள் என் ஊரில் உள்ள ஒரு அம்மாவுக்கு உடம்பு சரியில்லை, என்னிடம் வந்து அவர்களுக்காக ஜெபிக்க என்னை அழைத்தார்கள். நான் போக முடியாத சூழ்நிலை என்ன செய்வது என்று தெரியவில்லை ஜெபித்தேன், என் கணவரிடத்தில் சொன்னேன், அவர் உடனே அந்த அம்மாவுக்குப் போய் ஜெபம் பண்ணிட்டு வா என்று சொல்ல தேவன் கிருபை செய்தார். நான் போய் அவர்களுக்காக ஜெபித்தேன் அந்த அம்மா சுகமாகி விட்டார்கள். தற்போது நல்ல சுகத்தோடு இருக்கிறார்கள். இயேசுவை ஏற்றுக் கொண்டார்கள், சபைக்குச் சொல்கிறார்கள். என் குடும்பத்திலும் தேவன் இரட்சிப்பை தந்திருக்கிறார். இயேசப்பாவுக்கு கோடான கோடி நன்றி.

**சகோதரி. ஆரோக்கியமேரி நீலகிரி.**

என் மகள் சகாயநிர்மலா கால்வலியினால் மிகவும் கஷ்டப்பட்டால், அவளுக்காக ஜெபிக்குமாறு கடிதம் மூலம் தொடர்பு கொண்டு தங்களிடம் கேட்டுக் கொண்டேன். நீங்களும் என் மகளுக்காக தொடர்ந்து ஜெபித்ததின் பலனாக தேவன் ஜெபத்தைக் கேட்டு சுகத்தை தந்தார். ஜெபித்த உங்களுக்கு நன்றி. சுகம் தந்து தேவனுக்கு கோடான கோடி நன்றி.

**சகோதரி. ஜாய்ஸ் கர்நாடகா**

எனக்கு திருமணம் ஆகி 9 வருடங்கள் ஆகியும் ஒருநாள் கூட நான் சந்தோஷமாக இருந்ததில்லை. இந்நிலையில் என் கணவரும் என்னை விட்டுச்சென்று விட்டார். மிகுந்த மனவேதனையில் இருந்தேன். என் அம்மாவிடமோ, உடன் பிறந்தவர்களிடமோ என் நிலையை சொல்லக் கூட முடியாத சூழ்நிலையில், எனக்குள்ளே நான் மிகுந்த மனஉளைச்சலினால் மிகவும் கஷ்டப்பட்டுக் கொண்டிருந்தேன். இனி நான் ஏன் வாழ வேண்டும் செத்துவிட வேண்டும் என்று நினைத்துக் கொண்டிருந்தேன். அப்பொழுது தங்களின் ஊழியத்துடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டு என் மனபாரங்கள் அனைத்தையும் சொல்லி அழுது எனக்காக ஜெபிக்கச் சொன்னேன். தேவன் ஜெபத்திற்குப் பதில் தந்தார், ஜெபத்தில் கேட்டுக் கொண்டதின்படியே தேவன் அப்படியே செய்தார். மறுநாளே தேவன் என் கணவரை என்னிடம கொண்டு வந்து சேர்த்தார். என் மனபாரங்களையும், என்மேல் இருந்த நிந்தையையும் நீக்கி என்னை மகிழச் செய்தார். அவருக்கே எல்லா கனமும் மகிமையும் உண்டாவதாக.




# வாசகர்கள் கவனத்திற்கு !

அன்பான வாசகர்களுக்கு இயேசுகிறிஸ்துவின் இனிய நாமத்தில் வாழ்த்துக்கள். நமது இயேசு வாழ்கிறார் ஊழியத்தின் மூலம் **You Tube** சேனலில் ஒளிபரப்பாகும், கர்த்தாவே என்னை கைதூக்கி விடும், இயேசுவை தினம் பார்ப்போம், சுவிசேஷ ஒளி என்ற நிகழ்ச்சிகள் மூலமாகவும், இயேசுவை தினம் பார்ப்போம் பத்திரிக்கை மூலமாகவும், வானத்தின் வாசல் உபவாச ஜெபங்கள் மூலமாகவும் நீங்கள் பெற்ற நன்மைகளையும், ஆசீர்வாதங்களையும் எங்களுக்கு எழுதி அனுப்ப மறவாதிருங்கள்

**944 28 00 449**  **944 28 00 447**

# நடப்பு செய்திகள்

## 45 ஆண்டுகளாக உணவு உண்ணாமல் வாழும் அதிசய மனிதர் தந்தை உணவருந்துவதை ஒரு முறை கூட பார்க்காத மகன்

பொன்னமராவதி அருகே 45 ஆண்டுகளாக உணவு உண்ணாமல்வாழும் அதிசய மனிதர்வாழ்ந்துவருகிறார்.80 வயதான தந்தைஉணவருந்துவதைஒருமுறை கூட பார்க்கவில்லை என வேதனையுன் 33 வயதுமகன்தெரிவித்தார். புதுக்கோட்டைமாவட்டம்பொன்னமராவதி அருகே கட்டையாண்டிபட்டி கிராமத்தைசேர்ந்தநல்லு (80). இவரதுமனைவி அழகி. இந்த தம்பதியர்களுக்கு மூன்று ஆண் குழந்தை, 3 பெண்குழந்தை பிறந்த நிலையில்குழந்தைகள் சிறு வயதாக, இருக்கும்போதே அழகி உடல்நலக்குறைவால் இறந்துவிட்டார்.இவருக்குநல்லான், பெரியநாச்சி, மீனாட்சி, அடைக்கி, முருகன், அடைக்கலம் என ஆறுபிள்ளைகளுடன்ஏழ்மை நிலையில்கழித்துவந்தநல்லு, அதீத நம்பிக்கையும்கொண்டவராகவும், இருந்துவருகிறார். இவர் வேகுப்பட்டியில் உள்ளஒரு வீட்டில் காவலாளியாக பணிபுரிந்து வந்த நிலையில்மனைவி இறந்த நிலையில்குடும்பசூழ்நிலைகாரணமாகஉணவுஉண்பதைகுறைத்துவந்தார். காலப்போக்கில்உணவுஉண்பதைதவிர்த்துவந்துள்ளார். நாளடைவில்முற்றிலுமாககடந்த 45 ஆண்டுகளாகஉணவுஅருந்துவதை நிறுத்தியுள்ளார். திருமண வீடுகளுக்குமற்ற நிகழ்ச்சிகளுக்குசென்றாலும்அங்கும்உணவு உண்பதில்லை, தண்ணீர் மற்றும் காபி ஆகியவைமட்டுமேஅவ்வப்போது குடித்து வந்துள்ளார்.காலப்போக்கில் தனது மகன்கள் தந்தையைமருத்துவமனைக்குஅழைத்துசென்று பரிசோதித்து மருத்துவர்குளுக்கோஸ்சத்து மாத்திரைகளை பரிந்துரைசெய்துகாலப்போக்கில் உணவருந்தி விடுவார் என கூறி உள்ளனர். ஆனால்குளுக்கோஸ்மற்றும்சத்து மாத்திரைகளை மட்டுமேஉண்டுவிட்டுசாப்பாடு சாப்பிடுவதில்லை, 33 வயதான இவரதுகடைசி மகனான அடைக்கலம்அவர்வாழ்நாளில் தனது தந்தைஉணவு அருந்துவதைஒருமுறை கூட பார்த்ததில்லை என்று கூறி ஆச்சரியபடுத்துகிறார், தனது தந்தைக்கு உடல்நலக்கோளாறுஇருக்கும்என்று கருதி தனியார்மருத்துவமனையில் சிகிச்சைக்காகசென்றுவந்துள்ளநிலையில் ..இவரை பரிசோதித்த மருத்துவர்கள்இவருக்குஎந்த உடல்நிலைகோளாறும் இல்லை என தெரிவித்துள்ளனர்.இதுகுறித்து நல்லுவிடம் கேட்டபோதுஇதுஇறைவன் கொடுத்தஉத்தரவுஎன்றும் மீறினால்இறைவன் தண்டிப்பதாகவும் கூறினார். அவரதுஇளைய மகன்கூறுகையில் தனது தந்தைஉணவருந்தைஒருமுறையாவதுபார்க்கவேண்டும் என தெரிவித்தார். நாள்தோறும் இயந்திரமாக சுற்றுச்சூழலும் மனித வாழ்க்கையின்பிரதான தொழிலாக, இருந்துவருவதுஉணவுமட்டுமே. ஆனால் 45 வருடங்களாகஉணவேஅருந்தாமல் தனது ஏழுபிள்ளைகளுடனும்எட்டுபேரன் பேத்திகளுடன் மகிழ்ச்சியாக வாழ்ந்துவரும் நல்லுவின் கதைமிகவும் சுவாரசியமாகவும் விசித்திரமாகவும் இருக்கிறது. இப்படி வாழும் அதிசய முதியவரை அப்பகுதி மக்கள்ஆர்வமுடன்பார்த்துசெல்கின்றனர்.

Owned & Published by: Bro.L.VincentRaj , & Editor Bro.L.VincentRaj
Published by Jesus Lives Trust, Yesuvai Thinam Parkiren
54,A.I.B.E.A-Nagar,Paravai,Madurai - 625402
Printed by: C.CHELLACHAMY,PRISM PRINTERS,Madurai

# இயேசு வாழ்கிறார் ஊழியத்தோடு இணைந்து சுவிசேஷ ஒளியை பரவ செய்யுங்கள்

தேவன், தமது பிள்ளைகள் ஒவ்வொருவரும் தமது ஊழியத்தில் பங்கு பெறவேண்டுமென்று விரும்புகிறார்.அவரது நோக்கத்தை நிறைவேற்ற அவர் தமது பிள்ளைகளை பயன்படுத்துகிறார். நாம் வெறும் பார்வையாளராயிருப்பதை அவர் விரும்பாமல், அவரது ஊழியத்தின் பங்காளராக மாறுவதையே அவர் விரும்புகிறார்! நாம் கரையில் நிற்பதை விரும்பாமல் களத்தில் இறங்குவதையே அவர் விரும்புகிறார். அறிவிக்கப்படாத மக்களைச் சந்தித்து, சுவிசேஷத்தை கூறி, உலகை சுவிசேஷமயமாக்குகிற அந்த மகிமையான ஊழியத்தில் தமது பிள்ளைகள் ஒவ்வொருவரும் ஈடுபட வேண்டும் என அவர் விரும்புகிறார்!

விளையச் செய்கிறவர் தேவனாக இருந்தாலும், விதைக்கிற வேலையையும், நீர்ப்பாய்ச்சுகிற வேலையையும் அவர் நமது கரங்களில் ஒப்படைத்திருக்கிறார்(1கொரிந்தியர்3:7). இக்கடைசி காலத்தில், தமது சித்தத்தை நிறைவேற்றுகிற பணியில் ஈடுபடவேண்டுமென கர்த்தர் விரும்புகிறார்.

வாருங்கள்! இக்கடைசி கால எழுப்புதல் சுவிசேஷ பணியில் இணைந்து அவரது நோக்கத்தை நிறைவேற்றுகிற ஊழியத்தின் பங்காளர்களாக மாறுவோமாக!

## 1) BANK TRANSFER

| | |
|---|---|
| A/C NAME | : JESUS LIVES TRUST |
| BRANCH | : KOCHADAI MADURAI |
| BANK NAME | : UNION BANK OF INDIA |
| A/C.NO | : 493902010001022 |
| IFSC CODE | : UBIN0549398 |

| | |
|---|---|
| A/C NAME | : L.VINCENT RAJ |
| BRANCH | : MADURAI |
| BANK NAME | : AXIS BANK |
| A/C.NO | : 109010100247030 |
| IFSC CODE | : UTIB0001765 |

**2) இணையதளம்(WEBSITE)**
**WWW.JESUSLIVES.IN**

ஸ்கேன் செய்யுங்கள்

**3) காசோலை(CHEQUE)**
**JESUS LIVES TRUST OR L.VINCENT RAJ**

**4) GOOGLE PAY** : GPAY(GOOGLE PAY)TO , **944 300 9333 ,7598359316**

**5) மணியார்டர்(E.M.O) :** இயேசு வாழ்கிறார் ஊழியங்கள் 54 ஏ.ஐ.பி.இ.ஏ நகர், ஏ - காலனி பரவை ,மதுரை - 625 402

नमतु இயேசு வாழ்கிறார் ஊழியத்திற்கென்று வங்கிக் கணக்கு மூலமாகவோ, இணையதளம் மூலமாகவோ, அல்லது **GOOGLE PAY** மூலமாகவோ அனுப்பலாம். காணிக்கை அனுப்பியபின் அதைக் குறித்த விபரத்தை **944 28 00 449** என்கிற இந்த எண்ணில் தொடர்பு கொண்டோ, அல்லது இதே எண்ணிற்கு **WHATSAPP** மூலமாகவோ, **accounts@jesuslives.in** மூலமாகவோ எங்களுக்கு தெரியப்படுத்தவும்.

Date of Publication on 20th (Every Month)
RNI NO .TNTAM/2000/00621 Postal Registration No. TN/MA/42/2021-2023
WPP Registration No. TN/WPP-40/SR/2021-2023
Date of Posting 27th (Every Month) Posted at Madurai R.M.S




**TO**

If Undelivered (Please Return To)
YESUVAI THINAM PARKIREN
54,A.I.B.E.A Nagar,Parvai
Madurai-625402
South India.